[26th March 1958

SRI A. GOVINDASAMY : எத்தனை மாணவர்கள் இந்த இரண்டு ஹாஸ்டல்களிலும் சேர விண்ணப்பம் போட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால்தான் எத்தனை என்று சொல்லமுடியும்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த "அருந்ததியார்" சமூகம் என்றால் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : அருந்ததியார் என்றால் ஹரிஜனங்கள்தான்.

Intensive Manuring Scheme

***420 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the amount allotted districtwise for 1956–57 and 1957–58 under the Intensive Manuring Scheme for sanctioning loans to agriculturists for the cultivation of paddy and sugarcane ?**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மேஜையில் இருக்கக்கூடிய பேப்பரில் கண்டுள்ளபடி பார்த்தால், மற்ற எல்லா ஜில்லாக்களேயும்விட மிக மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கடன் கேட்பவர்கள் இல்லையா, அல்லது கேட்டாலும் கொடுக்க முடியாத காரணத்திலா, குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன் வருஷத்திலே எவ்வளவு கோரப்பட்டு எவ்வளவு செலவாயிற்று என்பதைப் பார்த்து ஒதுக்குகிறார்கள். ஆனால், டிஸம்பர் மாதத்தில் மறுபடியும் எவ்வளவு செலவாயிருக்கிறது என்பதைப் பார்த்து இன்னும் அதிகமாக வேண்டியிருந்தால் அதிகம் ஒதுக்குகிறார்கள். இவ்வாறு பார்த்தால் அதற்குமேல் தேவை இல்லாமல் இருந்திருக்கும். தேவை இருந்திருந்தால் இன்னும் ஒதுக்கப்பட்டிருக்கும். இது குறுகிய காலக் கடன். முன்பு வாங்கிய கடனில் பாக்கி இருந்தால் புதிதாகக் கடன் கொடுப்பதில்லை. கடன் பாக்கி இருப்பவர்கள் இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is the maximum loan given to each individual ? Is it in the form of cash or manure ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI S. LAZAR : ராமநாதபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட 50,000 ரூபாயில் எல்லாவற்றையும் மக்கள் பெற்றுக்கொண்டார்களா ? அல்லது அதில் மிகுதியாக சர்க்காரிடத்திலே ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே மீதி இருப்பதாகத் தெரியவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற வாரத்திலே இதே போன்று வட ஆற்காடு ஜில்லாவிலே ஒதுக்கப்பட்ட தொகையை 436 பேர்கள் கேட்டதற்கு, 126 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டபோது அவர்களுக்கு தகுதி

[a] Printed as Appendix IV on page 561 infra.

26th March 1958]

யில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு, இதற்கு முந்திய வருஷத்தில் எத்தனை பேர் கேட்டார்களோ, அந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது என்று சொல்லும்போது வட ஆற்காடு ஜில்லாவிற்கு அந்த நேரத்திலே அந்தக் கணக்கு அடிப்படையில் ஒதுக்கப்படவில்லை. இதற்கு மட்டிலும் இதுபோன்று செய்வதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே குறிப்பிட்டபடி, எவ்வளவு ஒதுக்கினாலும், பின்பு அதிகமாக ஒதுக்கி செலவிடப்பட்டு வருகிறது. ராமநாதபுரம்பற்றி கேள்வி கேட்டபோது புரியவில்லை. இப்போது சொல்கிறேன். 1956–57 வருஷத்தில் 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, பின்பு அது 78,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு, 71,215 ரூபாய் செலவிடப்பட்டது. அதே மாதிரி 1957–58-ம் வருஷத்திலே முதலில் 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, பின்பு அது 80,000 ரூபாயாக ஒதுக்கப்பட்டு, ஆனால் பணம் செலவானது 30,000 ரூபாய்தான்.

Steel

*** 421 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have requested the Centre to allot additional quota of steel to this State for the purpose of starting small industries ?**

THE HON. SRI R. VENKATARAMAN : This Government have addressed the Government of India for increasing the State quota for iron and steel for small-scale industries as the existing quota falls far short of the requirements of the small-scale industries in this State.

SRI N. K. PALANISAMI : ஸார், போதுமான உருக்குக் கிடைக்காததன் காரணமாக என்ஜினீயரிங் தொழில்கள் ஏற்படுவது தடைப்பட்டிருக்கிறது. பாக்கி மாகாணங்களைவிட அதிகமாகக் கிடைக்காவிட்டாலும், பாக்கி மாகாணத்திற்கு எந்த அளவு கிடைக்கிறதோ, அந்த அளவைப் பெறுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைத் தான் சொன்னேன். நம் ராஜ்யத்திற்கு இன்னும் அதிகமான இரும்பு உருக்கு கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

SRI S. LAZAR : இப்பொழுது இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு போதுமான ஸ்டீல் கிடைத்து வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, there is so much of black-marketing still going on in the matter of distribution of iron. That is due to the fact that the Government of India give permits for the import of steel from abroad. Side by side, permits for the purchase of indigenous steel are also issued and the merchants are allowed to deal in both the varieties. Will the Government of Madras kindly address the Government of India to stop the import of the foreign varieties and at the same time increase the indigenous quota to the merchants?

THE HON. SRI R. VENKATARAMAN : Unfortunately, the production of iron and steel in the country is hopelessly inadequate and we have to depend on foreign imported steel to some extent. Therefore, I think the remedy would be worse than the disease if we prohibit the import of steel.